# Was tun bei häuslicher Gewalt?

## வீட்டில் நடைபெறும் (குடும்ப) பிரச்சினைக்கு என்ன செய்யலபம்?

Tamilisch – தமிழ்



**உங்களுடன் வாழுபவர் –**உங்களது கணவர் அல்லது நண்பர் அல்லது உறவினரா உங்களுக்கு எதிராக உங்களை அடித்து சித்திரவதை செய்பவரா அல்லது பயமுறுத்துபவரா? இந்த சூழ்நிலை உங்களுக்கு பயத்தை உருவாக்குவதுடன் உங்கள் மனதை தாக்குகிறது.

உங்களுக்கு உதவியும் அறிவுரையும் தேவைப்பட்டால் நீங்கள் எங்கு போகவேண்டும் என்று அறியாமலிருந்தாலும் அத்துடன் எப்படி பிரச்சினையை தீர்ப்பது என்று தெரியாமலிருந்தாலும் ஹ நீங்கள் இந்த நபருடன் ஒன்றாக வாழ்வதோ அல்லது பிரிந்து வாழ்வதோ உங்களது முடிவுக்கு நாங்கள் உங்களுக்கு ஆதரவளிக்கிறோம்

பெண்களுக்கு உதவி செய்ய நியமிக்கப்பட்ட காரியாலயம் சர்வதேச வழியில் பெண்களுக்கு மட்டும் நியமிக்கப்பட்ட அறிவுரையும் உதவியும் வழங்கும் நிலையம். நாங்கள் உங்களது பிரச்சினையைப் பற்றி வேறு ஒருவருக்கும் வெளியில் தகவல் கொடுக்கமாட்டோம். இவ் அறிவுரையைப் பெறுவதற்கு நீங்கள் எதுவித பணமும் செலுத்த வேண்டியதில்லை. உங்களது விடையம் பாதுகாப்பாகவும் இரகசியமாகவும் கவணிக்கப்படும்.

நீங்கள் ஜேர்மன் மொழி பேசாத பட்சத்தில் உங்களுக்கு தெரிந்தவர்களை அல்லது நண்பின் மூலம் உங்களுக்காக எங்களுடன் தொலைபேசியில் பேசவிடலாம். இவரை உங்களுக்கு அறிவுரை வழங்கும் இடத்திற்கு அழைத்து செல்லவும்.

நீங்கள் வீட்டில் தாக்கப்பட்டால் 110ம் இலக்கத்திற்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பொலிஸாருக்கு அறிவிக்கலாம். இப்படி செய்வதன் மூலம் தொடர்ச்சியாக தாக்கப்படுவதில் இருந்து உங்களை காப்பாற்றிக் கொள்ளலாம்.

உங்களை தாக்கியவரை 10 நாட்களுக்கு வீட்டை விட்டு அகற்றுவதற்கு பொலிஸாருக்கு சந்தர்ப்பம் உள்ளது. இவ்வாறு பொலிஸார் செய்தால் உங்களை தாக்கியவர் இவ்வாறு குறிக்கப்பட்ட நாட்களில் வீட்டிற்குள் வரமுடியாது. எப்போது இவர் மறுபடியும் வீடு திரும்பலாம் என்பதை உங்களது பாதகாப்பிற்காக பொலிஸார் பரிசீலனை செய்வார்கள். இவர் வீட்டு சாவியை கொடுத்து விட்டு வீட்டைவிட்டு செல்ல வேண்டும். உங்களது வீட்டிற்கு இவ்விடையமாக பொலிஸார் வந்ததிற்காக, ஒரு ஆதாரப்பத்திரத்தை தருவார்கள். உங்களுக்கு 10 நாட்களுக்கு அமைதியாக இருந்து நீங்கள் என்ன செய்யப்போவீர்கள் என்பதைப் பற்றி முடிவெடுக்க சந்தர்ப்பம் உள்ளது.

**இந்த சந்தர்ப்பத்தில் நீங்கள் உங்களுக்கு ஆலோசனை வழங்குபவருடன் தொடர்பு கொள்ளலாம்.**

**நாங்கள் உங்களுக்கு இவற்றுக்கும் உதவி செய்கிறோம்.** நீங்கள் நீதிமன்றத்தில், எல்லோரும் கூடிவாழும் வீட்டில் வசிப்பதற்கு அவசர விண்ணப்பம் செய்வதானால் நீங்கள் உங்கள் பாதுகாப்பிற்காக நீதிமன்றத்தில் விண்ணப்பம் செய்வதற்கு இதன் மூலம் உங்களை தாக்கியவர் உங்களுடன் தொடர்பு கொள்வதை, உங்களுக்கு பிரச்சினை தருவதையும் அல்லது உங்களுக்கு அன்மையில் நடமாடுவதையும் நீதிமன்றம் மூலம் தடைசெய்யலாம்.

**நீங்கள் முடிவெடுக்கின்றீர்கள்** இப்படியான வாய்ப்புக்கள் இருந்தும் உங்களது பாதுகாப்பிற்காக பெண்கள் விடுதியில் வாழ்வதற்கும் பொலிஸாரின் உதவியுடன் நீங்களும் உங்களது பிள்ளைகளும் அங்கு அழைத்துச் செல்லப்படலாம்.

உங்களது வதிவிட அனுமதிப்பத்திரம் உங்களது கணவரில் தங்கியிருக்குமானால் பொலிஸாரினால் பதிவு செய்யப்பட்டு உங்களுக்கு தரப்பட்ட பத்திரத்துடன் உங்களுக்கு சொந்தமாக ஒரு வதிவிட அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு விண்ணப்பம் செய்யலாம். இவ்வதிவிட அனுமதிப் பத்திரம் நீங்கள் திருமணம் செய்து இரு வருடங்களுக்கு மேலாக இருந்தாலும் அத்துடன் உங்களது கணவருடன் ஜேர்மனியில் ஒன்றாக வாழ்ந்திருந்தால் ஜேர்மன் நாட்டில் வாழ்வதற்கான அனுமதிப் பத்திரம் கிடைக்கும். அல்லது நீங்கள் ஒரு ஜேர்மன் குழந்தையின் தாயாக இருந்தால் அல்லது தாயாகும் நிலையில் இருப்பீர்களானால் இரண்டு வருடம் முடியாமல் இருந்தாலும் இதைப்பற்றி வெளிநாட்டு காரியாலயம் தனித்தனிப் பட்ட முறையில் முடிவெடுக்கலாம். உங்களுக்கு ஜேர்மன் பெண்கள் போல் சமூக பண உதவிப் பெறும் உரிமையுண்டு. இப்பண உதவி பெறுவதன் மூலம் நீங்கள் பயப்பட தேவையில்லை கண்டிப்பாக இந்த நாட்டை விட்டு அனுப்பப்பட மாட்டீர்கள்.

## முகவரியும் தொலைபேசி இலக்கமும் ஹ


பெண்களுக்காக ஆதரவளிக்கும் நிலையம்
(Frauenberatungs- und Kontaktstelle)
Essenerstr.13 - 46236 Bottrop
தொலைபேசி இலக்கம் 02041 – 63 59 3
02041 – 68 84 03
தொலைநகல் 02041 – 76 50 45

பெண்கள் விடுதி நிலையம்
(Frauenhaus)
தொலைபேசி இலக்கம் 02041 – 40 92 03